# இயல் 3

## 3.1 : கடல்

## மதிப்பீடு

**படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!**

அ. சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

Question 1.
பெருமை + கடல் என்பதைச் சேர்த்து எழுதக் கிடைப்பது........................
அ) பெருமைகடல்
ஆ) பெருங்கடல்
இ) பெரியகடல்
ஈ) பெருமைக்கடல்
Answer:
ஆ) பெருங்கடல்

Question 2.

கருங்கடலே என்ற சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது........................
அ) கருமை + கடலே
ஆ) கருங் + கடலே
இ) கரும் + கடலே
ஈ) கரு + கடலே
Answer:
அ) கருமை + கடலே

Question 3.
'திரை' என்ற சொல்லின் பொருள்........................
அ) மலை
ஆ) அலை

இ) வலை

ஈ) சிலை

Answer:

ஆ) அலை

Question 4.

மழை பெய்வதற்குக் காரணமாக இருப்பது........................

அ) வானம்

ஆ) பூமி

இ) கடல்

ஈ) நெருப்பு

Answer:

இ) கடல்

**ஆ. இரண்டாம் எழுத்து ஒன்றுபோல் வரும் (எதுகை) சொற்களைப் பாடலிலிருந்து எடுத்து எழுதுக.**

**எ.கா. எல்லை - அல்லும்**

..............................

..............................

..............................

..............................

Answer:

பொங்கு - எங்கும்

மலையை - விலைகொள்

கடலே - கடலே

திரைகளோ - நிரைதாமோ?

**இ. முதலெழுத்து ஒன்றுபோல் வரும் (மோனை) சொற்களைப் பாடலிலிருந்து எடுத்து எழுதுக.**

எ.கா. அல்லும் - அலப்பும்

..............................

..............................

..............................

..............................

Answer:

மலையை - மகர

விலைகொள் - விளையாடற்

மழைக்கு - மதித்து

கடலே - கடலே

## ஈ. வினாக்களுக்கு விடையளிக்க.

Question 1.

கடல் நமக்கு அளிக்கும் வளங்கள் யாவை?

Answer:

மீன்கள், முத்துகள், சிப்பிகள் ஆகியவை கடல் நமக்கு அளிக்கும் வளங்கள் ஆகும்.

Question 2.

பாடலின் பொருளை உம் சொந்த நடையில் எழுதுக.

Answer:

- பெருங்கடலே! நீ இரவு பகல் உறங்காது அலைவீசி, ஓய்வில்லாமல் இருக்கின்றாய்.
- அலைகள் குதிரைகள் அணிவகுத்து வருவது போல் உள்ளது.
- அலையோசையா? இடியோசையா? என ஐயம் எழுகின்றது.
- அலைகள், மீன்கள், சிப்பிகள், முத்துகள் ஆகியவற்றைக் கொண்டது கடல்.
- பூமியில் மழை பெய்யவும், மழைநீரைத் தேக்கும் கலமாகவும் கடல் விளங்குகின்றது. ஆகவே, உன் பெருமைகளைச் சொல்ல வல்லவர்கள் யாரும் இல்லை.

## உ . சிந்தனை வினா.

Question 1.
எல்லையறியாய் பெருங்கடல் என்று கூறக் காரணம் என்ன? வகுப்பறையில் கலந்துரையாடுக.

Answer:
கடல் எல்லையற்றது. அதற்கு இதுதான் முடிவு என்று கூறமுடியாது. அது விரிந்து பரந்துள்ளது. எனவே எல்லையறியாய் பெருங்கடல் என்று கவிஞர் கூறியிருக்கின்றார்.